**செ.வெ.எண் - 29** **நாள்: 16.09.2019**

# அரியலூர் மாவட்டத்தில் விளம்பர பதாகைகள், தட்டிகள் வைப்பது குறித்து ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் விளம்பர பதாகைகள், தட்டிகள் வைப்பது குறித்து ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் **டாக்டர்.டி.ஜி.வினய், இஆப.,** அவர்கள் தலைமையில் இன்று (16.09.2019) நடைபெற்றது.

**இக்கூட்டத்தில், அனைத்து கட்சி பிரதிநிதிகள் மற்றும் அச்சக உரிமையாளர்களிடம் மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்ததாவது,**

விளம்பரபதாகைகள் மற்றும் தட்டிகள் வைப்பது குறித்த - 2011ன் விதிகளின்படியும் மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்ற தீர்ப்பின் படியும் தனியார், அரசு நிலம், பொது மற்றும் தனியார் கட்டிடங்கள், சாலைகள், மைதானங்கள் பொது மக்கள் கூடும் இடங்கள் உள்ளிட்ட பொது இடங்களில் பொதுமக்கள் மற்றும் சாலை பயன்பாட்டாளர்கள், பாதசாரிகளுக்கு இடையூறு ஏற்படும் வண்ணம் விளம்பர, வரவேற்பு பதாகைகள் மற்றும் தட்டிகள் வைப்பது முற்றிலும் தடை செய்யப்பட்டுள்ளது.

மேலும் அனுமதியின்றி விளம்பர பேனர்கள் வைத்தால் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற தீர்ப்புக்கு எதிரானதாக அமையும் என்று தெரிவிக்கப்படுகிறது. மீறி வைப்பவர்கள் மீது காவல்துறை மூலம் குற்றவழக்கு நடவடிக்கையுடன் ரூ.5 ஆயிரம் அபதாரதமும், ஓராண்டு சிறை தண்டனை வழங்கப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் **டாக்டர்.டி.ஜி.வினய், இஆப.,** அவர்கள் தெரிவித்தார்கள்.

இக்கூட்டத்தில், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) (பொறுப்பு) த.முருகன், மாவட்ட ஆட்சியரக சிரஸ்தார் (பொது) முத்துகிருஷ்ணன், அனைத்து வட்டார வளர்ச்சி அலுவலர்கள், நகராட்சி ஆணையர்கள், பேரூராட்சி செயல் அலுவலர்கள், அனைத்து அரசியல் கட்சி பிரதிநிதிகள் மற்றும் அச்சக உரிமையாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**